**சிலாபம் பிரதேச சபை**
**புத்தளம் மாவட்டம்**

-----------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 30 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் சிலாபம் பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) மீளாய்வாண்டில் 06 நிர்மாணங்களின் கிரயம் ரூபா 1,619,962 தொகை மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய கடன் ரூபா 274,162 ஆல் நிதிக்கூற்றுக்களில் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 123,497,590 ஆன கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 129,448,382 என நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) முன்னேஸ்வரம் ஓய்வு மண்டபத்திற்ககாக கிடைக்க வேண்டிய ரூபா 113,612 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) முன்னைய ஆண்டிற்கான நிலையான வைப்பு ரூபா 190,597 கூடுதலாக கணக்கீடு செய்தமை மீளாய்வாண்டில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

07 கணக்கு விடங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மற்றும் உரிய அட்டவணைகள் / பயன்பாட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் பிரகாரம் மீதிகளுக்கு இடையே எரூபா 12,366,300 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 149,071,908 தொகையான கிடைக்க வேண்டிய கணக்குகளில் ஓராண்டிற்கு மேற்பட்டிருந்த ரூபா 80,102,089 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செலுத்தவேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 49,746,544 தொகையான செலுத்த வேண்டிய கணக்குகளிலிருந்து ஓராண்டிற்கு மேற்பட்டிருந்த ரூபா 11,651,597 தொகை தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 கணக்காய்விற்கான தேவையான எழுத்துமூல சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 211,286,263 கூட்டுத்தொகையான 02 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது.

### 1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மை

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு

| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | பெறுமதி (ரூபா) | **இணக்கமின்மை** |
|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் | | |
| (i) 129(2)(அ)(ஊ) பிரிவுகள் | 124,211,262 | பிரதேச சபைக்கு கிடைக்க வேண்டிய சகல நீதிமன்ற தண்டப்பணங்கள், முத்திரைக் கட்டணங்கள் மற்றும் வாடகை ஆகியவற்றை உரிய முறையில் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 136 ஆம் பிரிவு | - | வரி அல்லது வாடகை வழங்கப்பட்ட 63 சபை ஆதனங்களின் வீதவரி / ஏக்கர் வரி என்பன அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 159(1) ஆம் பிரிவு | 620,339 | நிலுவை வாடகையை அறவிடுவதற்கு அசையாத சொத்துக்களை தடைசெய்வதற்காக செயற்பாட்டினை சபையினால் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |

(அ) **1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதிகள்**

| | | | |
|---|---|---|---|
| (i) விதி 65 | | | வியாபார மற்றும் கைத்தொழில் வரி கொடுப்பனவை தவிர்ப்புச் செய்யும் நபர்களின் பெயர் பட்டியலொன்று தயாரிக்கப்பட்டி ருக்கவில்லை. |
| (ii) விதி 218 | | | சபையின் அனைத்து காணி மற்றும் கட்டிடங்களும் ஒவ்வொரு ஆண்டிற்கும் ஒரு தடவையேனும் பரிசோதிப்பதற்கு பரிசோதனை சபை நியமிக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை

| | | | |
|---|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் 396(ஈ) | 67,611 | வழங்கப்பட்டு 06 மாதங்களுக்கு மேற்பட்ட காசோலை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 571 (2) | 1,714,053 | 2014 ஆம் ஆண்டிற்கு முன்னர் காணப்படும் பொது வைப்புக்கள் கணக்கின் மீதி தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

### 1.3.6 போதியளவு அதிகாரத்தால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

2015 ஆம் ஆண்டிற்காக 03 நிர்மாண வேலைகள் மற்றும் 2016 ஆம் ஆண்டிற்கான 06 நிர்மாண வேலைகளுக்குரிய முறையாக கிடைக்க வேண்டிய ரூபா 551,227 மற்றும் ரூபா 156,412 முறையான அங்கீகாரமின்றி திரட்டிய நிதியத்திற்கு பதிவழிக்கப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 43,296,658 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 50,149,812 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

| | | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
| | ------------ | -------------- | ----------------- | -------------------- | -------------- | ------------------ | ----------------- | -------------- | ---------------------- |
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| (i) | வீதவரி மற்றும் வரி | 6,388,200 | 9,145,867 | 7,146,898 | 4,614,577 | 5,476,000 | 4,793,694 | 4,246,949 | 2,615,608 |
| (ii) | வாடகை | 10,890,000 | 13,038,082 | 1,956,635 | 11,637,616 | 12,975,000 | 4,048,465 | 3,957,364 | 556,169 |
| (iii) | அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 2,773,000 | 1,170,774 | 1,170,774 | - | 2,701,000 | 5,945,729 | 5,945,729 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 66,870,000 | 67,064,674 | 18,474,301 | 200,525,147 | 138,885,000 | 66,439,760 | 1,095,534 | 151,934,774 |

குறிப்பு சேகரிக்கப்பட்ட வருமானத்தில் ஆண்டிற்காக பட்டியலிடப்பட்ட வருமானத்தில் சேகரித்தல் மற்றும் முன்னைய ஆண்டுகளின் நிலுவை வருமானத்தில் சேகரிக்கப்பட்ட அறவீடுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

மீளாய்வாண்டிற்குரிய பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 90,419,397 மற்றும் முன்னைய ஆண்டுகளில் நிலுவை வருமானம் ரூபா 155,106,551 இல் ரூபா 28,748,608 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டின் இறுதியில் ரூபா 155,106,551 தொகையான நிலுவை மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 216,777,346 இருந்தது.

### 2.2.3 வீதவரியும் வரியும்

மீளாய்வாண்டில் பட்டியலிடல் மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரிய நிலுவை வருமானத்தில் 61 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. ரூபா 177,983 ஆன மீதியான்று 2012 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து அறவிட வேண்டியிருந்தது.

### 2.2.4 வாடகை

மீளாய்வாண்டில் பட்டியலிடல் மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரிய நிலுவை வருமானத்தில் 14 சதவீதமான குறைந்த பெறுமதியொன்று மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன், ரூபா 416,397 ஆன நிலுவை மீதியான்று 2011 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து அறவிட வேண்டியிருந்தது.

### 2.3.5 நீதிமன்ற தண்டப்பணம்

மாகாணத்தின் பிரதம செயலாளரிடமிருந்து திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 35,405,307 ஆக இருந்ததுடன் முத்திரை கட்டணங்கள் ரூபா 88,092,283 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 1,092,283 தொகை 2012 ஆம் ஆண்டிற்கு முன்னையதாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொது உபயோக சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும்

கட்டுப்படுத்தல், மக்களின் நல விவகாரங்கள், வசதிகள் மற்றும் நலன்கள் ஆகிய சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் சபையினால் உறுப்புரைகளை விதித்து குறித்த சேவைகளை பொதுமக்களுக்காக நிறைவேற்ற வேண்டிய போதிலும 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 02 விடயங்களுக்கு மாத்திரம் உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன. பிறப்பிக்கப்பட்டிருந்த 02 உப உறுப்புரைகளும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) எதிர்பார்க்கப்பட்ட விளைவு மட்டங்களை அடையாமை**

செயல்நடவடிக்கை திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த 33 இலக்குகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 9,625,000 தொகை வருடாந்த பாதீட்டின் மூலம் நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 365,556 ஆன 06 செயற்பாடுகள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தன.

**(இ) கைவிடப்பட்ட செயற்பாடுகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் பாதீட்டின் மூலம் ரூபா 750,000 ஆன நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த 03 செயற்பாடுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் ரூபா 2,450,000 ஆன செயற்திட்டஙகள் கைவிடப்பட்டிருந்தன.

**(ஈ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) உக்கலடையாத கழிவுப்பொருள் விற்பனை செயற்திட்டம் மற்றும் இலக்ரோனிக் கழிவுப்பொருள் என்பவற்றை வெளியேற்றுவதற்காக தொட்டிகள் வழங்கும் திட்டம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபை அதிகாரப் பிரதேசத்தில் சேகரிக்கப்படும் கழிவுப்பொருட்களின் ஒருபகுதி தனியார் காணியொன்றில் இடப்பட்டு மண்ணால் மூடப்பட்டு வந்தது.

**(உ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

ஐக்கிய நாடுகளின் ‘‘நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030’’ இன் பிரகாரம் அடையப்பட வேண்டிய நோக்கங்கள் மற்றும் இலக்குகள் தொடர்பாக மீளாய்வாண்டில் சபை செயற்படுத்தியிருக்கவில்லை.

**3.2 மனித வள முகாமைத்துவம்**

சபைக்கு அங்கீகரிக்கப்பட்டிருந் 05 நூலகர் பதவிகள் மற்றும் 02 வேலைக்காப்பார் பதவிகள் 06 ஆண்டுகளாக வெற்றிடங்களாக காணப்பட்டன.

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 சொத்துக்களை பதிவேடுகளுக்கு உட்படுத்தப்பாடமை

காணி மற்றும் கட்டிடங்கள் பதிவேடொன்று நாளதுவரையாக பேணப்படாதிருந்ததுடன் காணப்படும் காணிகளின் சீரான உறுதியொன்று சபையிடம் காணப்படவில்லை.

### 3.5.2 பயன்படுத்தப்படாத மற்றும் விளைவற்ற சொத்துக்கள்

ரூபா 234,051 தொகையான களஞ்சிய இருப்பொன்று 2015 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் களஞ்சியத்தில் காணப்பட்டது.

### 3.4 பெறுகைகள்

### 3.4.1 பெறுகைகள் திட்டம்

சபையினால் தயாரிக்கப்பட்டிருந்த பெறுகை திட்டத்தின் பிரகாரம் வருடாந்த பாதீட்டுடன் இனங்காணாமல் கொள்வனவு, நிர்மாணங்கள் மற்றும் திருத்தங்களின் மொத்தம் ரூபா 55,828,000 ஆக இருந்தது.

### 3.5 ஒப்பந்த நிர்வாகம்

மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த 73 செயற்திட்டங்களில் ரூபா 3,600,000 தொகையான 18 செயற்திட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அங்கீரிக்கப்படாத 02 மூலதன விடயங்களுக்கா சபை நிதியத்திலிருந்து ரூபா 1,,057,915 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) நலன்புரி செயற்பாட்டிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 10,019,000 முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
| --- | --- |
| (அ) வருமான நிர்வாகம் | நிலுவை வருமான அறவீடு தொடர்பாக பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமை |
| (ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம் | விளைவற்ற சொத்துக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படாமை |
| (இ) ஊழியர் முகாமைத்துவம் | வெற்றிடங்களை நிரப்பாமை |
| (ஈ) இருப்பு | இறுதி இருப்பு கணக்குகளுக்கு கொண்டு வரப்படாமை |